நாத ஜோதி

# முத்துசாமி தீட்சிதர்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

பதிப்புரிமை

முதற் பதிப்பு: நவம்பர், 1945

மதராஸ் ரிப்பன் பிரஸ், இராமச்சந்திரபுரம்
For Anbu Nilayam, P. I. Card Q. H. No. Ty. 58.

நாத ஜோதி

# முத்துசாமி தீட்சிதர்

707

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் : திருச்சி ஜில்லா

# பதிப்புரை

முத்துசாமி தீட்சிதர், முருகன் திருவருளைப் பெற்ற அரிய சங்கீத சாகரர்; சக்தியின் வரம்பெற்று முத்து முத்தாகப் பக்திப் பாடல்களை அருளிய நாத ஜோதி.

தீட்சிதர் காலஞ்சென்று. இன்றைக்கு 110 ஆண்டு களாயின. தீபாவளி தினத்தன்று அவர் நாத ஜோதியிற் கலந்து மறைந்தார். ஆதலால் தமிழர் அனைவரும், சிறப்பாக ஸங்கீத வித்துவான்கள் எல்லா ரும், தீபாவளிப் பண்டிகையைத் தீட்சிதர் திருநாளா கச் சிறப்புறக் கொண்டாடவேண்டும்; வீடுகள் தோறும் அவரது கீர்த்தனங்கள் இன்னிசையுடன் முழங்கவேண்டும். தீட்சிதர் வரலாற்றை இக் குறுஞ் சுவடியாக எழுதி உதவிய யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கட்கு, எமது நன்றி உரியதாகுக.

இராமச்சந்திரபுரம்
3—11—1945

அன்பு நிலயத்தார்.

௧௯—௧—௲

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்புரை | ... | 5 |
| 1. | கோவிந்த தீட்சிதர் | ... | 8 |
| 2. | வேங்கடமகி | ... | 9 |
| 3. | இராமசாமி தீட்சிதர் | ... | 10 |
| 4. | ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் | ... | 13 |
| 5. | கல்விப் பயிற்சி | ... | 14 |
| 6. | சிதம்பரநாத யோகி | ... | 15 |
| 7. | தந்தை மகிழ்ந்தார்! | ... | 16 |
| 8. | முருகன் திருவருள் | ... | 17 |
| 9. | பக்தியே ஜீவனம் | ... | 19 |
| 10. | அக்ஷயலிங்க விபோ | ... | 21 |
| 11. | சிஷ்யர்கள் | ... | 21 |
| 12. | மதுரை யாத்திரை | ... | 22 |
| 13. | எட்டையபுரம் | ... | 24 |
| 14. | இறுதி நாள் | ... | 25 |
| 15 | உபதேச சாரம் | ... | 26 |

நாத ஜோதி

# முத்துசாமி தீட்சிதர்

## சங்கீத சாகரர்

இராகம்: பைரவி] [ஆதி தாளம்

### பல்லவி

"முத்துமுத் தாகவே
முருகன் குஹன் அருளால்
பத்தியிசை பொழிந்தார்
முத்துசாமி தீட்சிதர்! (முத்து)

### அநுபல்லவி

சித்த புருஷரான
சிதம்பர யோகியால்
சக்தியின் வரம்பெற்ற
சங்கீத சாகரர்! (முத்து)

### சரணம்

சுத்த கீர் வாணமும்
ச்ருதி லய கமகமும்
சொகுசாக மேவிய
சுககன வாக்கேயர்;
சத்திய கானத்தால்
சகுணபூஜை செய்தே
சாக்ஷாத்கார மடைந்த
தீக்ஷா குரு வாழ்கவே! (முத்து)

— சுத்தானந்தம்.

## 1. கோவிந்த தீட்சிதர்

முன்னே யாராவது சங்கீத வித்துவான் என்று வந்தால்; "தீட்சிதர் கிருதிகள் வருமா? பாடும்!" என்பது வழக்கம். தியாகராஜ கிருதிகள் நளின சரள மதுரமானவை. தீட்சிதர் பாடல்களைப் பாட, தக்க புலமையும், சமுஸ்கிருதஞானமும்அவசியம். தசவித கமகங்களும்தொண்டையில் கிணீரென்று பேசவேண்டும். தியாகராஜர் சங்கீதத் தென்றல்; சாமா சாஸ்திரிகள் இசைச் சூறுவளி; தீட்சிதர் சங்கீதப் புயல். மூவரும் அருள் பெற்ற மகான்களாவர்; மூவரும் கர்நாடக சங்கீதத்திற்கு உயிரும் உடலும் உள்ளமும் போன்றவர்கள்.

சாரங்க தேவருக்குப் பிறகு, நமது தமிழகத்தில் வளர்ந்த இசைக்கலைக்கு உயிர்கொடுத்த மகான், **கோவிந்த தீட்சிதர்** ஆவார். இவர், தஞ்சை நாயக்கரான செல்லப்பன், அச்சுதன், இரகுநாதன் ஆகிய மூன்று மன்னர் காலத்திலும் மந்திரியாயிருந்து நாட்டை ஆண்டார். இவர் தெலுங்கு, கன்னடம், கீர்வாணம் ஆகிய மூன்று மொழிகளிலும் கரைகடந்த புலவர்;வேதாகம நிபுணர், வேதாந்த சிரோமணி, ஆசார சீலர், சத்தியவான், சிவ பக்தர்; பல சிவ விஷ்ணுஸ்தலங்களில்ஆலயத் திருப்பணி செய்தவர்.தியாகராஜர் படித்த சமுஸ்கிருத கலாசாலை, இவர் நாட்டியதே. கும்பகோணத்திலும் இவர் பாடசாலை ஏற்படுத்தினர். இவரை ஜனங்கள் "ஐயன்" என்றழைப்ப துண்டு. 'ஐயன் குளம், ஐயன் சாவடி, ஐயன் சத்திரம், ஐயன் வாய்க்கால் என்று இவர் பெயரால் கணக்கற்ற தானதருமங்கள் நாடெங்கும் விளங்குகின்றன. இந்த மகான்,சங்கீதத்தில் பெரிய மேதாவி. இவர் "சங்கீத சுதை" என்னும் அரிய நூலைச் செய்து, இரகுநாத நாயக்கர் பேரால் வெளியிட்

டார். அதில் பதினைந்து மேளங்களில் அடங்கிய ஐம்பது ராகங்களை விளக்கினார். இவரே தசகமகங்களும் பேசும் ஒரு வீணை யமைத்து, அதற்கு "இரகுநாத வீணை" என்று பெயரிட்டார். இவர் அன்று ஆதரித்த வீணைத்தொழில், இன்றும் தஞ்சையில் நடக்கிறது! இவர், கும்பகோணத்திற்கு அடுத்த பட்டீசுரம் (தேனுபுரம்) என்னும் கிராமத்தி லிருந்துகொண்டு நாடெல்லாம் ஆட்சி செலுத்திப் புகழ் படைத்தார். இவரை என்றும் கோயிலில் வைத்து நம்மவர் கும்பிடுவது தகும்; அவ்வளவு பெரியவர்!

## 2. வேங்கட மகி

இந்த மகானுக்கும்,மனைவி நாகம்மைக்கும் பிறந்த எட்டுப் புதல்வரில் சங்கீதமணியாக விளங்கியவர், வேங்கட மகி என்பவர். இவர், தந்தையைப் போலவே தெலுங்கு சமுஸ்கிருத பாஷா விசாரதராயும், சங்கீத கலாநிதியாயும், ஆசார சீலராயும், பரம பாகவதராயும் விளங்கினார்; இவர் பல வித்துவான்களை ஆளாக்கினார். மதுரையில் திருமலை நாயக்கர் மந்திரியான நீலகண்ட தீட்சிதர் இவரது மாணவரே. வேங்கடமகி, முதலில் தமயனாரான யக்ஞநாராயணரிடம் சமுஸ்கிருதம் கற்றார்; பிறகு, தானப்பாசாரியரிடம் சங்கீதம் கற்றார். 1660—ஆம் ஆண்டில் இவர் செய்த "சதுர்தண்டிப் பிரகாசிகை"யில் யாழிசை, சுருதிலட்சணம், ஸ்வரம், மேளம், ராகம், ஆலாபனம், டாயம், கீதம், பிரபந்தம், தாளம் ஆகிய எல்லாவற்றின் இலக்கணமும் விளங்கும். இவர் ஏராளமான கீதங்களும் செய்திருக்கிறார். வேங்கடமகி, பரம சிவபக்தர். அக்காலத்தில் வழங்கிய இசை நூல்களை யெல்லாம் ஆராய்ந்து, சுயமாகவே "சதுர்தண்டிப் பிரகாசிகை" என்ற நூலை எழுதினார்; இவர் 22 சுருதி

களையே ஒப்பினர்; 72 மேளகர்த்தாக்களை விவரித்தார். சங்கீத உலகிற்கு இந்நூல் சமய சஞ்சீவிபோல் உதவுகிறது. இந்நூலில் வேங்கடமகி, திருவாரூர் தியாகராஜருக்கு வணக்கம் செலுத்துகிறார். தியாகராஜ சிவன் அருளாலேதான் பிற்காலம் அதே ஊரில் சங்கீத மும்மணிகள் உதித்தனர். வேங்கடமகியின் தாய்ப் பேரரே, வேங்கட வைத்திநாத தீட்சிதர். இவரே நமது முத்துசாமி தீட்சிதரின் தந்தை இராமசாமி தீட்சிதருக்குச் சங்கீத குருவானர். அந்தக் கதையைக் கேளுங்கள்: வேங்கட வைத்திநாத தீட்சிதருக்கு 'முத்து வேங்கடமகி' என்றும் பெயர் உண்டு.

## 3. இராமசாமி தீட்சிதர் (1735–1817)

காஞ்சிபுரத்திற்கு அருகே விரிஞ்சிபுரம் உள்ளது; அது பாடல் பெற்ற சிவஸ்தலம். அதில் வேங்கடேஸ்வர தீட்சிதர் என்னும் வடமர், பாகீரதி யம்மாளுடன் இல்லறம் நடத்தி வந்தார். இவர் காசியப கோத்ரி, ஆபஸ்தம்ப சூத்ரி, நித்திய அக்னிஹோத்ரி, வேதவித்து, கீர்வாண கற்பகம், பரம தெய்வ பக்தர். அக்காலம் காஞ்சீபுரம் அமைதியற்றிருந்தது. பகைவர் படையெடுப்பு நகரை அச்சுறுத்தியது. அம்பிகை ஆணைப்படி தீட்சிதர், தமது குடும்பத்துடன் திருவிடைமருதூருக்கு அடுத்த கோவிந்தபுரத்தில் வந்து குடியேறினர்.

கோவிந்தபுரம், போதேந்திர சுவாமிகள் அடங்கிய புண்ணிய ஸ்தலம்; இவர் பூர்வாச்சிரமத்தில் புருஷோத்தமன் என்ற பெயருடன் வேதாகமங்களைக் கற்றுத் தேர்ந்தார்; கும்பகோணம் சங்கராச்சாரியாரா யிருந்த விசுவாதிகேந்திர சரஸ்வதி சுவாமிகள் அன்பிற்குப் பாத்திரமாகிக் காசியில் துறவு பூண்டார். இருவரும் இராமேச்

வரம் சென்ற வழியில், சங்கராச்சாரியார் சித்தியடைந்தார். அவர் தமது பீடத்திற்குப் போதேந்திர சுவாமிகளையே நியமித்தார்; இவர் நாம சித்தாந்த கிரந்தம் அருளினார்; பஜனை பத்ததி செய்தார். இவரது முயற்சியால் நாடெங்கும் ஹரி ஹர பஜனை முழங்கியது. இவருடைய நாமசங்கீர்த்தன கைங்கரியத்தைத் திருவிசைநல்லூர் ஐயாவாள் என்கிற ஸ்ரீதர வேங்கடேச்வர தீட்சிதர் ஊக்கமாக நடத்தினார். போதேந்திரர் 1752-ம் ஆண்டு கோவிந்தபுரத்தில் அடங்கினார். அங்கே இவர் பெயரால் இன்றும் நாமசங்கீர்த்தனமும், அன்னதானமும் நடந்து வருகின்றன. இங்கே நமது வேங்கடேச தீட்சிதரும், பக்தியும் பஜனையும், வேதபாராயணமுமா யிருந்து, தமது குமாரனுக்கு வேதாத்யயனம் செய்து வைத்தார்.

அந்தக் குமாரனே, இராமசாமி தீட்சிதர். இவர் 1735ஆம் ஆண்டில் விரிஞ்சிபுரத்தில் பிறந்து, ஏழாவது வயதில் பெற்றோருடன் கோவிந்தபுரம் வந்தார்; அங்கே வேதசாஸ்திரங்களை நன்ருகக் கற்றறிந்தார். போதேந்திரமடத்தில் நடந்துவந்த பஜனையில் இவர் சிரத்தைகொண்டு சங்கீதத்திற் கருத்தூன்றினார். இவர் குரல் குயில்போல் இருக்கும்; ஏகஸந்தக்ராகி; சங்கீத சாகரத்தில் நீந்திக் கரைகாண ஆர்வந்துடிப்பவர். மகாலிங்க சிவனிடம் பரம பக்தி பூண்ட இவர், அடிக்கடி மத்தியார்ஜுனம் சென்று, ஸ்தல மகிமையை உபந்யாசிப்பதும், சிவநாம கீர்த்தனங்களையும் ஸ்தோத்திரங்களையும் பல ராகங்களிற் பாடி வணங்குவதுமானார். இவருடைய திவ்ய சாரீரத்தைக் கேட்ட ஒரு மாமா, இவரை வீரபத்ரையர் என்ற பெரிய இசைப்புலவரிடம் கொண்டு சேர்த்தார். அவர் மாமாதான் இந்த மகோபகாரி. அவர் வேங்கடமகியின் சிஷ்யபரம்பரையைச் சேர்ந்தவரே. ஸ்ரீராமசாமி தீட்சிதருக்குப் பதினாரும்

வயதிலேயே பெற்ருேர் இறந்தனர். வாலிபர் தமது கருத்தை யெல்லாம் இசைப் பயிற்சியிலேயே ஊன்றினுர். தஞ்சாவூர் வீரபத்ரையர் இரண்டு வருஷம் சிக்ஷை சொல்லி வைத்து, இராமசாமியைப் பெரிய வித்துவானுக்கினுர். குருவின் ஆணைப்படியே தீட்சிதர் மாயவரம் சென்று, மயூரஸ்வாமி சந்நிதியில் தமது கந்தர்வ வித்தையை அர்ப்பணித்தார். அதைக் கேட்ட புலவர் இவரை நன்ருகப் போற்றினர். ஆனுல் இளம் வித்துவானுக்கு இன்னும் இசையாராய்ச்சி செய்ய ஆவலிருந்தது. வீரபத்ரையர் குருபரம்பரை திருவிடைமருதூரில் உண்டு என்பதை அறிந்து, வித்துவான் அங்கே சென்ருர்.

அங்கே வேங்கடமகியின் தாய்வழிப் பேரராகிய வேங்கட வைத்தினுத தீட்சிதர் சிறந்த வீணைவித்துவானுகவும், நித்திய அக்னிஹோத்ரியாகவும், வைதீக பூஷணமாகவும் விளங்கினுர். இவர் வேதபாராயண பாரங்கதர்; இவருக்குப் பல மந்திர சித்திகள் உண்டு. இவர் இராமசாமி தீட்சிதரை, மகாலிங்க ஸ்வாமி சந்நிதியில் பாடக் கேட்டு மகிழ்ந்தார்! இராமசாமி, வேதவித்தகரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, "என்னைச் சிஷ்யனுக ஏற்றுக் கொண்டு, சங்கீத ரகசியங்களை உபதேசிக்க வேண்டும்" என்று வேண்டினுர். குரு, சிஷ்யனை ஏற்றுக்கொண்டு ஓராண்டில் சதுர்தண்டிப் பிரகாசிகையும் வீணையும் பயிற்றி,மகாவித்துவானுக்கினுர்."வித்தையால்பக்திகானம் செய்; பரம்பரையாக நாதவித்தையை வளர்" என்று குரு ஆசீர்வதித்து, மாணவரைத் தஞ்சாவூருக்கு அனுப்பினுர். அங்கே இவர் மராட்டிய மன்னர் சபையில்பாடிப் பல சன்மானங்களைப் பெற்ருர். இராமசாமி தீட்சிதர் மாயவரம் சீர்காழி முதலிய திருத் தலங்களைத் தரிசித்துக்கொண்டே சிதம்பரம் சென்ருர். அங்கே சிற்சபேசன் சந்நிதியில்

ஆனந்த பரவசமுடன் வீணுகானம் செய்தார். எல்லாரும் மனமுருகிக் கேட்டனர். அச்சபையில் இருந்த ஸ்ரீ சிதம்பர நாத சுவாமிகள் என்னும் மந்திர சித்தர், தீட்சிதர் கலைத் திறனையும் பக்தி ரசத்தையும் வியந்து போற்றித் தம்முடன் அழைத்துச்சென்று, அவருக்கு வித்தியா தீட்சையுடன் ஸ்ரீவித்யா ஷோடசாக்ஷரி மந்திரத்தையும் உபதேசித்தார். அவர் கட்டளைப்படியே தீட்சிதர் திருவாரூர் சென்று தியாகராஜப் பெருமானையும் கமலாம்பிகையையும் கானுர்ச்சனத்தால் பக்தி செய்து வந்தார். சுவாமி புறப்பாடுகளில் இவர் பஜனை செய்ததுடன், மேளகாரர், வாத்தியக்காரர், ஓதுவார், நட்டுவர், பரதநாட்டியர் அனைவரையும் இலக்கணப்படி கந்தர்வ வித்தையை விளக்கச்செய்தார். இன்றும் அப்படியே நடந்துவருகிறது. தியாகராஜப் பெருமான் மீதும், கமலாப்பிகை பேரிலும் இவர் ஏராளமான கீர்த்தனங்களைப் பாடி வழிபட்டார். இவர் 'ஹம்ஸத்வனி' என்ற இனிய ராகத்தைப் புதிதாக இயற்றி, அதில் பல கீர்த்தனங்களைப் பாடி, ரசிகர்களைப் பரவசப்படுத்திஞர். "ஹம்சத்வனி ப்ரபந்தம்" ஒன்றும், அவர் எழுதிஞர். "வேங்கட கிருஷ்ணன்" என்ற முத்திரை வைத்து, இவர் ஏராளமான கிருதிகள் செய்து சிவார்ப்பணமாக்கிஞர்.

## 4. ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர்

ஸ்ரீ ராமசாமி தீட்சிதர் சுப்புலக்ஷ்மி அம்மாளுடன் நிறைமுறையான இல்லறங் காத்தார்; ஏகாதசி விரதமிருந்து அஷ்டபதியும், பிரதோஷ விரதமிருந்து சிவ பஜனையும் சேவித்தார். நாற்பது வயதுவரையில் அவருக்குக் குழந்தையில்லை; பிறகு வைத்தீச்வரன் கோவிலுக்குப் போய், திவ்யநாம சங்கீர்த்தனம் செய்து, ஒரு மண்டலம் முத்துக்குமார சுவாமி சந்நிதியில் தவமிருந்தார். தீட்சிதர்

கனவில் அந்தத் தெய்வம் வந்து, முத்துமாலை யளித்ததாம்; சுப்புலக்ஷ்மி மடியில் தேங்காய், பழம், மஞ்சள் வைத்த தாம்! தம்பதிகள் மகிழ்ச்சி கொண்டு திருவாரூருக்குத் திரும்பினர். சுப்புலக்ஷ்மி யம்மாள் கருத்தரித்தாள். 1775—ஆம் ஆண்டு, மன்மத வருஷம் பங்குனி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில், தியாகராஜப் பெருமாள் பிரம்மோத்ஸவ தினத்தில், ஸ்ரீ முத்துக்குமார சுவாமி வரப்பிரசாதத்தால் குழந்தை பிறந்தது. அதற்கு "முத்துசாமி" என்ற திருப்பெயர் சூட்டி, பெற்றோர் அருமையாகச் சீராட்டி வந்தனர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு,சின்னசாமி என்ற வேங்கட வைத்தியநாதன், பாலாம்பாள் என்னும் பெண், பாலுசாமி என்ற கடைசிப்பிள்ளை பிறந்தனர்.

## 5. கல்விப் பயிற்சி

முத்துசாமி சிறுவயதிலேயே பக்திமானானான்; குலவித்தையான தெலுங்கு சமுஸ்கிருதம் சங்கீதம் மூன்றிலும் தகப்பனாரிடம் கற்றுத் தேர்ச்சி பெற்றான்; காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம் முதலிய இலக்கியங்களை முறையாகக் கற்றான்; தகப்பனாரைப் போலவே வீணை வாசித்தான்; சிவனிடமும், முருகனிடமும், பராசக்தியிடமும் அன்பு செலுத்தித் தனது கானவித்தையைக் கொண்டு உபாசனை செய்தான். இவனுக்குச் சிறுவயதிலேயே பெரம்பூரில் விவாகம் ஆனது; ஆனால் அவன் மனம் பற்றற்றுத் தெய்வபக்தியிலேயே ஆழ்ந்திருந்தது. மனைவி கறுப்பா யிருப்பதுதான் காரணம் என்று நினைத்து, மற்றோர் அழகியைப் பெற்றோர் மணமுடித்தனர். அப்படியும் பிள்ளையின் மனம், குடும்ப விவகாரத்தில் திரும்பவில்லை. முதல் மனைவிக்கு ஓரே பெண்; அந்தப் பெண்ணின் சந்ததியே இன்னும் வழங்கி வருகிறது.

தந்தை இராமசாமி தீட்சிதரின் வீணுகானத்தில் ஈடுபட்ட வள்ளல் மணலி சின்னையா முதலியார் என்பவர், அவரைக் குடும்பத்துடன் மணலிக்கு அழைத்துச்சென்று உபசரித்து அங்கேயே வசிக்கச்செய்தார். அவர் மகன் வேங்கடகிருஷ்ண முதலியார், வித்துவானிடம் பரமபக்தி கொண்டு கனகாபிஷேகம் செய்தார். தமது கீர்த்தனங்களுக்கும் இராமசாமி தீட்சிதர் "வேங்கடகிருஷ்ண முத்திரை" வைத்தார். இங்கேதான் முத்துசாமி, சதுர்தண்டிப் பிரகாசிகை, சோதிடம், மந்திரசாஸ்திராதிகளைக் கற்முன்.

## 6. சிதம்பரநாத யோகி

இச்சமயம் இராமசாமி தீட்சிதருக்கு மந்திரோபதேசம் செய்வித்த ஸ்ரீ சிதம்பரநாத யோகிகள் வந்து, தீட்சிதரின் உபசாரங்களைப் பெற்முர். யோகியாருக்கு முத்துசாமி, பக்தி சிரத்தையுடன் கைங்கரியம் செய்தார். இந்த வாலிபனின் உள்ளமும் ஒளியும் அறிவும் தெய்வ பக்தியும் மனப் பக்குவமும், இசையறிவுங் கண்ட யோகியார், தாம் காசிக்குப் போகும்போது அவனையும் உடனழைத்துச் சென்முர். இரண்டு மனைவியரும் கைங்கரியங்களுக்காகப் பின்தொடர்ந்தனர். தந்தை முதலில் அரைமனதாயிருந்து, முதலியார் தைரியம் சொன்னபிறகு நிம்மதியாகப் பிள்ளையை அனுப்பினர். விசுவாமித்திரருடன் சென்ற இராம லட்சுமணர்களைப்போல யோகியுடன் இளம் தீட்சிதரும் சென்முர்! கிருஷ்ணு, கோதாவரி, யமுனு, கங்கா நதிகளில் நீராடி, பூரி, கயா, பஞ்சவடி முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு, யோகியுடன் மாணவர் காசிக்குச் சென்று விசுவநாத தரிசனம் செய்தார். குரு யோகி, மஹாதிவ்ய தாந்திரத்தில் சொல்லப்பட்ட சக்தி உபாசனையும், ஸ்ரீவித்தியா ஷோடசாக்ஷரி

மந்திரத்தையும் உபதேசித்து, ஐந்தாண்டுகள் சங்கீத ரகசியங்களுடன் மந்திரஜப சாதனமும் தியானசாதனமும் அளித்தார். தீட்சிதர்;கர்னுடகக் கலையுடன் இந்துஸ்தான் சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்ருர். குரு மிக்க மகிழ்ந்து "அன்பா, இனித் தமிழகம் செல்; திருத்தணி முருகனை உபாசி; முருகன் அருளால் நீ இசைபெறுவாய்; மந்திர ஜப தியானுதிகளை வைராக்கியமாக ஆச்ரயித்து லோகோப காரமாக நாதவித்தையைப் பரப்பிவா" என்று நல்ல வாக்களித்தார். ஆனுல் குருவை விட்டுப்போக சிஷ்யருக்கு மனமில்லை. "நான் இன்னும் மந்திரசித்தி பெற்ற தாகத் தெரியவில்லையே" என்ருர் தீட்சிதர். "அன்பா, கங்கையை அர்க்கியம்விட எடுக்கும்போது, நீ நினைத்தது அதில் தோன்றும். அதுதான் சித்திக்கு அடையாளம்!" என்ருர் குரு. அப்படியே தீட்சிதர், வீணையை நினைத்துக் கங்காஜலத்தை அள்ளினுர். அதில் புதியவீணை தோன்றியது! அதன் பானையில் "ஸ்ரீராம்" என்று எழுதியிருந்தது! அப்படியும் குருவைப் பிரிய மனமில்லை. சில நாட்களில் குருவே உடல் பிரிந்தார். தீட்சிதர், அவருடலுக்கு ஹனுமந்த கட்டத்தில் சமாது கட்டிவைத்து, செய்யவேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்துவிட்டே மணலிக்குத் திரும்பினுர்.

## 7. தந்தை மகிழ்ந்தார்!

தந்தை முதுமையால் மெலிந்தார். மூத்தமகன் காசிக்குப் போனது அவருக்கு வருத்தமா யிருந்தது. இரண்டாவது பிள்ளை சின்னசாமிக்குக் கண்தெரியாமற் போனது அதற்காகத் திருப்பதி வேங்கடரமண ஸ்வாமி சந்நிதியில் நாற்பத்தெட்டு நாள் நாற்பத்தெட்டு ராகங்களில் கீர்த்தனம் சேவித்தார். "மனஸா வேறி தருல தலசக", "இங்க நயாராகருன்ன" என்ற இரண்டு கீர்த்தனங்களும் புகழ்

பெற்றவை! இவ்வாறு பாடிமுடித்து காளஹஸ்திக்குப் புறப்படும்போதே, சின்னசாமிக்குக் கண் தெரிந்தது! தந்தை மிக்க மகிழ்ச்சியுடன் பெருமாளுக்குச் சிறப்புச் செய்து, மணலிக்குத் திரும்பினார். இம் மகிழ்ச்சியை இருமடங்காக்க, முத்துசாமியும் மனைவியருடன் காசியிலிருந்து வந்தார்; அவர் அனுபவங்கள், சித்திகள், சிதம்பரநாத யோகியின் பெருமைகள் எல்லாம் கேட்டுப் பூரித்துத் தந்தை மகனை ஆசீர்வதித்து, "இனி நாதசேவை செய்து கொண்டிரு" என்றார். வயோதிகமானதால் தந்தையை முதலியார் துணையால் திருவாரூரில் கொண்டுபோய் சௌக்கியமாக வைத்துவிட்டு, தீட்சிதர் திருத்தணிக்குச் சென்றார்; சகோதரரும் உடன் சென்றனர்.

## 8. முருகன் திருவருள்!

தீட்சிதர் பக்தி சிரத்தையுடன் ஜபதபாதிகளை முடித்து, குகமந்திரத்தைப் பாடித் திருத்தணி முருகனைச் சிந்தித்துக்கொண்டே மலையேறினார். ஒரு கிழவனார் எதிர்ந்து, "முத்துசாமி, வாயைத் திற" என்று ஒரு கற்கண்டைப் போட்டு ஆசீர்வதித்து மறைந்தாராம்! தீட்சிதர் அப்போதே, மயில்மேல் ஏறிச் செல்லும் ஷண்முகனைத் தரிசித்து ஆவேசமுற்றார்! முருகன் திருவருளால் கான வாக்கு உதித்தது; நாதவாணி எழுந்தாள். தீட்சிதர் குகனையே குருவாகப் பாவித்து, மாயாமாளவ கௌள ராகத்தில், "ஸ்ரீநாதாதி குருகுஹோ ஜயதி" என்ற கீர்த்தனத்தைப் பாடினார். அதிலிருந்து தீட்சிதர் வாக்கில் நாத அருவி பொங்கி, வெள்ளமாக ஓடிச் சங்கீதக் கலையை வளர்த்தது. "மானஸ குருகுஹ" என்ற ஆனந்தபைரவிக் கீர்த்தனமும் உடனே எழுந்தது! தீட்சிதர் கீர்த்தனங்கள், சிறந்த வடமொழிப் புலமை, ஸ்வர ராக தாள லய பத்ததி, உள்ளுருக்கம், ஞானப் பொருள், பக்தி பரவசம் எல்லாம்

சேர்ந்து, கணக்காக சாஸ்திரப்படி அமைந்தவை. அவற்றில் பிராசலட்சணங்கள் பொருந்தி யிருக்கும். பழைய மகாவித்துவான்களெல்லாரும் (பட்டணம் சுப்பிரமணிய ஐயர், பூச்சி ஐயங்கார், கோனேரிராஜபுரம் வைத்திநாத ஐயர் உள்பட எல்லாரும்) முத்துசாமி தீட்சதரின் ஹம்ஸத்வனிராகக் கீர்த்தனமான **வாதாபி கணபதிம் பஜேஹம்** என்றஅற்புத வாக்கைப் பாடியே கச்சேரி தொடங்கினர்; தீட்சிதரின் இசைத்திறமை முழுதும் அந்த ஒரு கீர்த்தனத்திற் காணலாம். இப்படியே எல்லாக் கீர்த்தனங்களும் எல்லா வகையிலும் சிறந்தவை. தமது கீர்த்தனங்களுக்கு அவர் "குருகுஹ" என்ற முத்திரை யிட்டார். அக் கீர்த்தனங்களைக் குரு மூலமாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றாலே, சரியாகப் பாடமுடியும். இராகத்திற் கேற்ற உணர்ச்சியைக் கீர்த்தனங்களில் அமைத்துப் பாடும்போதே, ஒவ்வொரு சொல்லிலும் நாதவாணி நடமாடும்! தீட்சிதர் எல்லாத் தெய்வங்களின் மீதும் பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று அப்பர் சுந்தரர் போலப் பாடினார்.

திருத்தணியிலிருந்து தீட்சிதர் காஞ்சீபுரம் சென்றார். அங்கே தியாகராஜர் குருவாகப் பாவித்த மகான், உபநிஷத் பிரம்மத்தைக் கண்டு வணங்கி, அவர் செய்த இராமாஷ்டகத்திற்கு ஸ்வரம் அமைத்தார்; தினம் காமாக்ஷி கோயிலுக்கும், ஏகாம்பரர் சந்நிதிக்கும் சென்று பாமாலை சூட்டினார். "ஏகாம்பர நாதம் பஜேஹம்" என்ற கமகக்கிரியை கீர்த்தனமும், "நீரஜாக்ஷி காமாக்ஷி" என்ற ஹிந்தோளக் கீர்த்தனமும், "கஞ்சதளாயதாக்ஷி காமாக்ஷி" என்ற கமலா மனோகரிக் கீர்த்தனமும், "வரலக்ஷ்மி" என்ற ஸ்ரீராகக் கீர்த்தனமும் பிரசித்தமானவை. காஞ்சியிலிருந்து சுவாமிகளிடம் **விடை** பெற்றுக்கொண்டு, சிதம்பரம், சீர்காழி, திருவண்ணாமலை முதலிய பல தலங்

களைக்கண்டு, தீட்சிதர் திருவாரூர் சென்றார். இச்சமயம் தந்தை மிகவும் வயோதிகரானார். தியாகராஜப் பெருமானைப் பாடி, மகன் தந்தைக்கு அமைதியளித்தார். தீட்சிதரின் தாயார் இறந்தாள். பிறகு மகா சிவராத்திரி யன்று தகப்பனாரும் சிவநாமத்துடன், மகன் பாடிய சிவகீதங்களைக் கேட்டுக்கொண்டே, சிவபதம் அடைந்தார்! இச்சமயம் தீட்சிதருக்கு வயது நாற்பத்தி நான்கு.

## 9. பக்தியே ஜீவனம்

முத்துசாமி தீட்சிதர் தமது சங்கீதத்தை விலைக்கு விற்கவில்லை; அதைப் பாடிப்பாடி சிவார்ப்பணமே செய்து வந்தார்; தியாகராஜஸ்வாமிமேல் ஏராளமான கீர்த்தனங்களைப் பாடினார். ஒரு நண்பர், "ஓய் வித்துவானே, தஞ்சாவூர் மன்னரைக் கண்டு அவர்மீது ஒரு பாட்டுப் பாடினீரானால் கனகாபிஷேகம் பெறலாமே! ஏன் தரித்திரப் படுகிறீர்?" என்றார். "நண்பரே, நான் போகராஜனைப் பாடமாட்டேன்; போஜராஜனையும் பாடேன்;' எனது தியாகராஜனையே பாடுவேன்!" என்று "தியாகராஜ யோக வைபவம்", "தியாகேசம் பஜரே" முதலிய கீர்த்தனங்களைப் பாடி, வறுமையையும் பொறுத்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் தமது பிதுரார்ஜித நிலத்திற்கு வரி செலுத்தப் பணமில்லை. உடனே நிலத்தை ஒரு பிராமணருக்குத் தானம் செய்துவிட்டார். மற்றொரு நாள் பூஜை நிவேதனத்திற்குக்கூட வகையில்லை. அவரிடம் இசைப் பயிற்சி பெற்ற கமலம், தனது நகைகளை விற்றுக் குருவிற்கு உதவப் புகுந்தாள்; குரு அதைத் தடுத்தார். நகைகளை அவளிடமே கொடுத்துவிட்டு, "தியாகேசா, உன் இச்சை நடக்கட்டும்! என்னைக் காப்பது உன் பாரம்!" என்று "தியாகராஜம் பஜரே, சித்த தாபத்ரயம் த்யஜரே"

என்ற ஹரிகேதாரகௌள கீர்த்தனம் பாடி, பஜனை செய்துகொண்டே யிருந்தார். மனைவி மக்கள் கவலைப் பட்டுக்கொண்டே, 'பசி என்ன செய்யுமோ' என்றிருந் தனர். திடீரென்று வாசலில் இரண்டு வண்டி நிரம்ப அரிசி, பருப்பு முதலிய எல்லாச் சாமான்களும் வந்து இறங்கின! அதைக் கண்ட மாணவரும் வீட்டாரும் சிவமகிமையை உணர்ந்து மகிழ்ந்தனர்! அந்த ஊர்ச் சத்திரத்திற்கு ஒரு பெரிய உத்தியோகஸ்தர் வருவதா யிருந்தது; வரவில்லை. அவருக்காகச் சேர்த்த சாமானை அகுதார், தீட்சிதருக்குக் கொண்டுவந்தார். ஏதோ தெய்வ சங்கற்பம் நடந்தது என்று தீட்சிதர் பதினெரு கீர்த்தனங்கள் பாடி, தெய்வ சக்திக்கு நன்றி செலுத்தினர். கமலாம்பாள் மகிமை, அக் கீர்த்தனங்களில் விளங்கும். இந்த அற்புதத்தைக் கண்ட இளைய மனைவிக்கு, ஓர் ஆசை பிறந்தது! "இப்படியே பாட்டுப் பாடி, எனக்கு நல்ல நகைகள் வரவழைத்துத் தாருமே!" என்று அவள் கணவனை வேண்டினுள். குருபத்தினியின் மனம் அறிந்த ஒரு மாணவர், "தஞ்சாவூர் மராட்டிய மன்னர் முன் பாடினுல் நிரம்ப அணிமணிகள், பணம், பதக்கம், சால்வை, பல்லக்கு எல்லாம் கிடைக்கும்" என்ருர். மறுபடியும் தீட்சிதர் லலிதா ராகத்தில் "ஹிரண்மயீம்— லக்ஷ்மீம் ஸதா பஜாமி ஹீன மானஸாச்ரயம் த்யஜாமி" என்று பாடினுர். அன்றிரவு சர்வாபரண சகிதம் மகாலக்ஷ்மியே இளையாள் கனவில் வந்து, "இவ்வளவு நகை போதுமா?" என்ருளாம்! உடனே அவளுக்கு நகைப் பைத்தியம் ஒழிந்தது. காலையில் எழுந்து கணவனை வணங்கி, "நாதா, இனி நகைப் பேச்சே எடுக்க மாட்டேன்; எனக்குப் புதிய ஆனந்த அணியை மகாலக்ஷ்மி கனவில் கொடுத்துவிட்டாள்!" என்ருள். தீட்சிதர் உடனே "மங்களதேவ தயாத்வயா" என்ற தன்யாசி

ராகக் கீர்த்தனம் பாடி, தெய்வ சக்திக்கு நன்றி செலுத்தினார்.

## 10. அக்ஷயலிங்க விபோ

தீட்சிதர் மாயவரம் சென்று காணார்ச்சனம் செய்து வந்ததும், தம்பி சின்னசாமி மதுரையில் இறந்த செய்தி வந்தது; மிகவும் வருந்திப் பிறகு தெளிந்தார்; மனம் நிம்மதி யடையவேண்டி, யாத்திரை செய்யப் புறப்பட்டு நாகபட்டினத்தில் நீலாயதாட்சி அம்பிகையைப் பாடினார். நீலாம்பரியில் பாடிய "அம்ப நீலாயதாக்ஷி" என்ற கீர்த்தனம் புகழ்பெற்றது. குளிக்கரையில் அவர் விசுவநாதரையும் அன்னபூரணியையும் பாடினார்; மன்னார்குடியில் இராஜகோபாலர்மீது அசாவேரியில் "ஸ்ரீ ராஜகோபால" என்ற கீர்த்தனம் செய்தார்; கீவளூரில் அக்ஷயலிங்கத்தைப் பாட ஆசையுடன் சென்றார். அப்போது குருக்கள், கதவை மூடிச்சென்றார். தீட்சிதர், "சந்நிதி தரிசனம் செய்யவேண்டும்; கொஞ்சம் தாமதித்துப் போமே" என்றார். "சுவாமி நாளை வரைக்கும் தாமதிப்பார்; நாளை வந்து பாரும்" என்றார் குருக்கள். தீட்சிதர், "அக்ஷயலிங்க விபோ" என்ற அற்புதமான சங்கராபரணக் கீர்த்தனம் பாடியதும், கதவு திறந்தது! குருக்களும் வியந்து மரியாதை செய்தார்; பிறகு தஞ்சாவூர் சென்று பிரகதீசுரரைப் பாடித் திரும்பினார்.

## 11. சிஷ்யர்கள்

தீட்சிதர், தக்க மாணவருக்கு நாதவித்தையைத் தமது கீர்த்தனங்களுடன் முறையாகப் பயிற்றி, சங்கீத குருகுலம் நடத்தினார்: திருக்கடையூர் பாரதி, ஆவுடையார் கோயில் வீணை வேங்கடராமய்யர், தேவூர் சுப்பிரமணிய ஐயர், கொரநாடு இராமசாமி, வில்வவனம் ஐயாசாமி,

சுத்தமத்தளம் தம்பியப்பன், வடிவேல், பொன்னையா, சிவானந்தம் சகோதரர், திருவாரூர்க் கமலம், அம்மணி முதலியோர் தீட்சிதரிடம் சங்கீதம் பயின்று புகழ்பெற்றனர். பொன்னையா பிள்ளை, அரிய பதங்கள் இயற்றினர். வடிவேலு, வயலின் வாசிப்பதில் பெரும் புகழ் பெற்றார்; தீட்சிதர், தாம் இயற்றிய சுமார் 300 கிருதிகளையும் இவர்களுக்குப் பாடம்பண்ணி வைத்தார். தம்பியப்பனுக்கு வந்த தீரா வயிற்றுநோய், தீட்சிதரின் நவக்ரக கீர்த்தனங்களைப் பாராயணம் பண்ணியதால் தீர்ந்தது! அக் கீர்த்தனங்களின் மந்திர சக்தியால் தம்பியப்பன் பிறர் நோய்களையும் தீர்த்தான் என்பர்!

## 12. மதுரை யாத்திரை

தீட்சிதரின் இசைத் திறமையும் மதுர கானமும், கம்பீரமான சாகித்தியமும், பரிசுத்தமான வாழ்க்கையும் நாடெங்கும் புகழ்பெற்றுப் பரவின. ஆனுல் தியாகராஜரைப் போல் இவரும் கடவுளுக்கே பாடினர்; கச்சேரிகளுக்கன்று; வறுமையைப் பொறுமையாகத் தாங்கிக் கொண்டு இசைத்தொண்டு புரிந்தார். மதுரையிலிருந்து தீட்சிதரைப் பார்க்கச் சில சங்கீத அபிமானிகள் வந்தார்கள். அப்போது சகோதரர்களுடன் தீட்சிதர் தமது கிருதிகளை தியாகராஜர் சந்நிதியிற் பாடினர். அன்பர்கள் மிக்க மகிழ்ச்சிகொண்டு தீட்சிதர் கிருதிகளைத் தம் ஊரில் சிட்சை சொல்லிப் பரப்பவேண்டுமென்று வேண்டினர்கள். தீட்சிதர் தமது தம்பிகளை அதற்காக அவர்களுடன் அனுப்பினர். சின்னசாமி, தெலுங்கு, சமுஸ்கிருத வித்துவான்; சங்கீத பாரங்கதர்; இனிய குரலுடையவர்; அவர் நாகஸ்ராவளி பாடிய ஒரு நாள், ஒரு நாகமே வந்து ஆனந்தக் கூத்தாடிச் சென்றதாம்! பாலுசாமி பாட்டு, ஸ்வரகத், வீணை, வயலின், சிதார், மிருதங்கம் அனைத்திலும் வல்ல

மகாவித்துவான். மணலி சின்னையா முதலியார் உதவியால் அவர் ஒரு ஐரோப்பிய வித்துவானிடம் வயலின் கற்று, ஐரோப்பிய சங்கீதத்திலும் புலமை பெற்றார். இரண்டு சகோதரர்களும் பல செல்வர்களிடமும் சமஸ்தானாதிபதிகளிடமும் பாடிப் பரிசு பெற்றனர். தீட்சிதர் கிருதிகளை இவர்கள் ஆவேசமாகப் பாடிப் பிரசாரம் செய்தனர். மதுரையிலும் இருவரும் நல்லபெயர் வாங்கினார்கள்.

தம்பிமார்களை மதுரைக்குச் சென்று பார்த்துவர அண்ணன் விரும்பிப் புறப்பட்டார்; வழியில் திருவையாற்றில் தர்மஸம்வர்த்தனி அம்பிகையைப் பாடினார். அப்போது அவர் தியாகராஜரையும் தரிசித்திருக்கக் கூடும்; திருச்சி மலைக்கோயிலில் மாதுர்பூதேசர், குந்தலாம்பாள் முதலிய தெய்வங்களைப் பாடினார். திருவானைக்கா, ஸ்ரீரங்கம், அகண்டகாவேரி முதலிய ஸ்தலங்களெல்லாம் பார்த்துக்கொண்டு, பழனியாண்டவரையும் தரிசித்து, தீட்சிதர் மதுரைக்கு வந்தார்.

மதுரையில் இதற்கு முன்பே தம்பி சின்னசாமி திடீரென்று காய்ச்சலால் இறந்து போனார். அந்தத் துக்கம் தாளாமல் பாலுசாமி சேது யாத்திரை சென்றார்; அண்ணன், சின்னசாமிக்காகப் பெருந் துயரப்பட்டுப் பிறகு ஒருவாறு மனந்தெளிந்தார். தீட்சிதர் மீனாக்ஷியம்மன்மேல் பூர்வகல்யாணியில் "ஸ்ரீ மீனாக்ஷி", வராளியில் "மாமவ மீனாக்ஷி" என்ற கீர்த்தனங்களைப் பாடினார். பாலுசாமியைத் தேடிக்கொண்டு தாமும் பிறகு சேது யாத்திரை சென்றார்; வழியில் தர்ப்பசயனம், தேவி பட்டணம் முதலிய க்ஷேத்திரங்களில் இராமர் விஷயமாக, "ஸ்ரீராமம்", "கோதண்டராமம்", "மாமவ ரகுவீரா" முதலிய பல கீர்த்தனங்களைச் செய்தார். இராமேஸ்வரத்

தில் பாலுசாமி-இல்லை. தீட்சிதர், இராமநாத சுவாமிக்குப் பாமாலை சூட்டிப் பணிந்து மதுரைக்குத் திரும்பினார்.

## 13. எட்டையபுரம்

தீட்சிதர், தம்பி பாலுசாமியின் விபரமே தெரியாமல் திகைத்தார்; பிறகு, கடவுள் செயல் நடக்கட்டும் என்று அழகர்மலையில் கீதாஞ்சலி செய்து சாத்தூருக்கு வந்து, வேங்கடேசப் பெருமாளைப் பாடினார். அதைக் கேட்ட ஒரு வைணவர், "தீட்சிதரே, வாரும் எட்டையபுரத்திற்கு; அங்கே வித்துவான் பாலுசாமி தீட்சிதருக்குக் கலியாணம்; நல்ல தட்சிணை, சாப்பாடு, சன்மானம் எல்லாம் கிடைக்கும்"என்றழைத்தார். "ஆ! பாலுசாமியா, நமது தம்பிதானோ?" என்று மகிழ்ந்து, சுருட்டி ராகத்தில் "பால சுப்பிரமணியம் பஜேஹம்" என்று ஒரு கீர்த்தனம் பாடிக் கட்டை வண்டியில் ஏறி, நண்பருடன் தீட்சிதர் புறப்பட்டார். அந்தப் பக்கமெல்லாம் மழையில்லாமல் வறண்டு போயிருந்தது. தீட்சிதர் அமிர்தவர்ஷணி ராகத்தில், "ஆனந்தாமிர்த கர்ஷணி" என்ற பாட்டைப் பாட்டியதும், 'ஜோ' வென்று மழை கொட்டியது! "வர்ஷய வர்ஷய" என்று பாடப் பாடக் கொட்டிய மழை, "ஸ்தம்பய ஸ்தம்பய" என்று பாடவே, நின்றது! எல்லாரும் மகானை வியந்து வணங்கினர். எட்டையபுரம் அரசர், தக்க சிறப்புடன் மகாவித்துவானை வரவேற்றார். தம்பி பாலுசாமி, அண்ணனை வணங்கி மரியாதை செய்தார். அவரது திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. தீட்சிதர், எல்லாம் கண்குளிரக் கண்டு, தமது இசைப் பாடல்களையும் பொழிந்து, இளைய மனைவியுடன் திருவாரூர் வந்து சேர்ந்தார். அரண்மனையிலும் ஒரு கல்யாணம் அதே முகூர்த்தத்தில் நடந்தது. அன்று

பாலுசாமி கச்சேரி ஏற்பாடாயிருந்தது. பெரிய தீட்சிதர் வந்ததை அறிந்த மகாராஜா, அவரையும் வரவழைத்துச் சபையில் இருத்தி, சகோதரர் கானத்தைக் கேட்கும்படி செய்தார். அன்று கேட்ட பாலுசாமியின் பாட்டானது, பெரிய தீட்சிதரின் எதிரொலிபோல் இருந்தது என்று பெரியோர் சொல்லுவர்.

## 14. இறுதி நாள்

தீட்சிதருக்கு வயது 59; அவர் தமது இறுதிக்காலம் நெருங்கியதாக உணர்ந்தார். மனைவியரும் காலஞ்சென்றனர். ஒரு பெண் குழந்தையையும் கட்டிக் கொடுத்தாயிற்று. மீனாக்ஷியம்மனையே அவர் பக்தி செய்துகொண்டிருந்தார். இச்சமயம் எட்டையபுரம் இளவரசர் கல்யாண அழைப்பு வந்தது. மகான், தம்பியையும் அப்படியே பார்க்கலாமென்று புறப்பட்டு, மதுரை மீனாக்ஷியைத் துதித்து வணங்கி எட்டையபுரம் சென்றார்; மூன்று மாதம் அங்கே சௌக்கியமா யிருந்தார். ஒருநாள் பட்டத்தானை மதம் பிடித்து அமளி செய்தது. அரசர் அதை அடக்கமுடியாமல் திகைத்துத் தீட்சிதரிடம் முறையிடவே, இவர் " உன் ஜனங்களுக்கோ, இராஜ்யத்திற்கோ எக் கெடுதலும் வராது " என்று நல்வாக் களித்து விபூதி தந்தார். மதயானைமேல் விபூதியை ஊதவே, அது சாதுவாக மயானத்திற்குப் போய்ப் படுத்துக்கொண்டிருந்தது!

1835–ஆம் ஆண்டு; தீபாவளிப் பண்டிகை; எல்லாரும் மங்களஸ்நானம் செய்து, தீட்சிதர் மீனாம்பிகை பேரில் அருளிய கிருதிகளைப் பாடி வீணை மீட்டினர். பாலுசாமி உருக்கமாகப் பாடினார். " மீனலோசனி பாசமோசனி " என்ற அடியைக் கேட்டுக் கேட்டுத் தீட்சிதர் கண்ணீர் வடித்தார்; இரு கைகளையும் தலைமேல் குவித்து, " சிவே

பாஹி, சிவே பாஹி......சிவே பா......ஹி! ஓம் சிவே!" என்ருர். உடனே ஒளிவடிவாக அவர் ஆவி பிரிந்தது! அரசரும் குடிகளும் மகான் உடல் பிரிந்ததை வருந்தி, உடலுக்கு அலங்காரஞ் செய்து, மகானின் அருள் வாக்குகளைப் பாடிக்கொண்டே செய்யவேண்டியதைச் செய்து முடித்தனர்.

தீட்சிதர் தினம், தீபாவளியன்று வருகிறது. அவர் காலஞ்சென்று, இன்றைக்கு 110 ஆண்டுகள் ஆயின. அவர் பெண்வயிற்றுப் பேரன்மார் இருவர் உளர்: ஒருவர் ரயில்வே குமாஸ்தாவான இராமச்சந்திரையர்; மற்ெருருவர், சென்னையில் சர்க்கார் காரியாலயத்தில் தக்க உத்தியோகத்திலிருக்கும் வேங்கடராமையர். பாலுசாமி பெண் அன்னபூர்ணம்மாளின் பிள்ளையே, சுப்புராம தீட்சிதர். இவரே சங்கீத சம்பிரதாயப் பிரகாசினியில் பல தீட்சிதர் கிருதிகளை வெளியிட்டு உதவினுர். இவர் தமது முன்னேர் சேர்த்துவைத்த இசைச் செல்வத்தை யெல்லாம் அந்த நூலில் கொட்டியளித்து, உலகிற்குப் பேருதவி செய்தார். இவர் குமாரரான முத்துசாமி தீட்சிதரே, இப்போது ஆந்திர தேசத்தில் தீட்சிதர் பாடல்களைப் பரப்பிவருகிருர். தீட்சிதர் பாடல்களை நல்ல பதிப்பாக ஸ்வரத்துடனும் அர்த்தத்துடனும் வெளியிட வேண்டும். தீபாவளியைச் சங்கீத ஒளியான தீட்சிதர் திருநாளாக அனைவரும் கொண்டாட வேண்டும்!

## 15. உபதேச சாரம்

ஸ்ரீமுத்துசாமி தீட்சிதர் அவர்கள் பாடிய கீர்த்தனங்களிலிருந்து சில இனிய கருத்துக்களைத் தொகுத்து இதனடியில் தருகிறேன். இவற்றைத் தீட்சிதர் உபதேச சாரமாகக் கொள்க:

1. காசியில் வீற்றிருக்கும் ஏ வாதாபி கணபதியே! பற்றில்லாத யோகிகளால் துதிக்கப்பட்டவனும், உலகப் படைப்புகளுக்குக் காரணமானவனும், துன்பங்களை நீக்குபவனுமான உன்னைப் பஜிக்கிறேன். உன் அருள் வேட்கையும், உன்னைத் துதிக்கும் இன்பமும் வேண்டும்; என் உள்ளத்தில் வேறு வேட்கைகள் அற்றிடவேண்டும். ஏ பிரணவ ஸ்வரூபியே! உன் திருவடிகட்கு வணக்கம்! (வாதாபி, கணபதிம் பஜேஹம்).

2. மனமே! நீ சாஸ்வதமான பேரின்பத்தைத் தேடிக்கொள். அதற்கு வழி? யோகிகளின் இருதயத் தாமரையில் வண்டுபோல் வசிக்கும் பரமாத்மாவான சிவஷண்முகனை, சரவணபவனை, சுத்த ஜோதியை, நீ தவறுதுபோற்றித் துதித்து வருவாயாக!மனமே, நீ சித்த சலனமின்றி சிவஷண்முகனின் பாதமே பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, உன் பந்தவினை யொழியும்! ("மானஸ குருகுஹ ரூபம்").

3. காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏ காமாட்சி அம்பிகையே! இன்னல்களைத் தீர்ப்பவளே! அழுக்கற்றவளே! நின் மிருதுவான சரணங்கள், மணிகளால் அலங்கரிக்கப் பட்டவை; அத்திருவடிகளைப் பஜிக்கிறேன்! என் துயர் களைவாயாக. தாயே! என்னை இப் பிறவிப் பிணியினின்றும் காப்பது நின்கடன்! ("கஞ்சதளாயதாக்ஷி—காமாக்ஷி").

4. மீனாக்ஷியே! மதுரையில் கோயில் கொண்டவளே! சந்தோஷமான மனதும், நல்ல தயையும் மிக்குடையவளே! எனக்கு நித்தியானந்தத்தைக் கொடு; என் மரண பயத்தை ஒழி. தாயே! உன்னை நம்பின பேருக்குத் துன்பமேது? ("மீனாக்ஷி—மே—முதந் தேஹி").

5. ஏ சிற்சபேசா, சிதம்பரநாதா, ஆனந்த நடன சிகாமணியே, தில்லை மூவாயிரவருக்கு முதல்வா!

நீயே சகல புவனத்திற்கும் ஆதிகர்த்தா; புத்தியும் முத்தியுந் தருபவன். என் இருவினைக் கட்டுகள் இற்றுச் சுயேச்சை பெற, நான் அனவரதமும் உன்னை நினைந்து நினைந்து கசிந்துருகி வழிபடுகிறேன்; அற்பக் கவலைகள் என்னை விழுங்காது காப்பாற்று! ஏ எல்லையற்ற சுவையே! என்றும் என்னை நீ வாழ வைப்பாயாக! ("ஆனந்த நடனப்ரகாசம்").

6 ஏ மகாலக்ஷ்மீ, கருணாகரீ, வையமெல்லாம் ஆதரிப்பவளே! நின் இன்பமே வேண்டுகின்றேன்! நின் அன்பு என்மீதிருக்குமாயின், நான் அமரன்போல் வாழ்வேன்! தாயே, போதும் இவ்வறுமைத் துயர்! எப்போதும் புன்சிறுமையால் வேதனைப்படும் என் மனதை, நின் திருவடியில் ஊன்றிச் சரண்புகுவேன்; என்னைக் காப்பாற்று! ("மகாலக்ஷ்மீ—கருணா--ரஸலஹரி").

7. ஸ்ரீ பால கோபாலா! நீலமேக சியாமளா! ஆணவமாகிய கம்ஸனை ஹதம் செய்தவனே! கீதையுரைத்த கீர்த்தியனே! என்றும் நின் இன்னருளைப் பாடும் நற்றொழிலே, எனக்குத் தந்தருள்! நிரஞ்சனா! நீ என் நெஞ்சத்தில் குடிகொண்ட நாள்முதலாய், என் எண்ணம், விசாரம் எதையும் உன் பொறுப்பாக்கினேன். செல்வம், சீர், சிறப்பு, நற்கீர்த்தி, கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம், தெளிவுசேர் சிவஞானம், ஒளிசேர் நலமெல்லாம் ஓங்க அருள்புரிந்து, என்னைக் காப்பாற்றுவாயாக! ("பால கோபால").

நாத ஜோதி வாழ்க!